த்தாக அறிகிறேன். அது உண்மையா, இல்லையா என்பதை மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் இதை எல்லாம் சொல்வதற்குக் காரணம், ''சட்டியிலே இருந்தால் தானே அகப்பையில் வரும்''? சரிதான். ஆனால், அதே நேரத்தில், ஏழைகளிடத்திலே வரி போட்டு, அதன் மூலம் பணக்காரர்களுக்கு சலுகைகளை வழங்குகிற ஒரு நிலை வருமானால், அந்த நிலையைத் தடுத்து நிறுத்த வேண்டியது தலையாய கடமை. Tap the rich and pat the poor என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆனால், இந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையை நான் பார்க்கிற போது, You are tapping the poor and patting the rich.

பிற்பகல் 2-20

அவர்களே சொன்னார்கள் 'இந்த டாட்டா-பிர்லா கூட்டாளி, பாட்டாளிக்குப் பகையாளி'' என்றெல்லாம் சொன்னவர்கள் நாம். ஆனால், இந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையைப் பார்க்கிற போது, இதிலே வசதி படைத்தவர்களுக்கு சலுகைகளை வாரி வழங்கியிருக்கிறீர்கள். வறியவர்களுக்கு வரியை ஏற்றிக் கொண்டே போயிருக்கிறீர்கள். அதனால், நாங்கள் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதை ஏற்க இயலாது என்று கூறி, உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 16—3—1992 திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-21 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

18. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப் பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்த விற்பனைக்கு வழங்குதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், ஆயவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 25—10—1990 தமநாளிட்ட 966 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட

[1992 மார்ச் 13

அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

19. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 30—8—1991 ஆம் நாளிட்ட 309 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

20. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 30—8—1991 ஆம் நாளிட்ட 311 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

21. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியப் பணி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 19—9—1991 ஆம் நாளிட்ட 1246 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (அபிவிருத்தி மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

22. 1990-91 ஆம் ஆண்டிற்கான அரசு ரப்பர் கழகத்தின் ஏழாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1?1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

ஏதுமில்லை.